

C

HOME SERIES



ÆSOP'S FABLES

IN TAMIL VERSE

WITH

MUSIC AND ILLUSTRATIONS.

BY

V. KRISHNAMACHARIAR,

FELLOW OF THE UNIVERSITY OF MADRAS.

சிறுவர்க்காகும்

நீதிகதாகிருதிகள்.

HOME SERIES.

ÆSOP'S FABLES

IN TAMIL VERSE

WITH

MUSIC AND ILLUSTRATIONS.

BY

V. KRISKNAMACHARIAR,

FELLOW OF THE UNIVERSITY OF MADRAS.



சிறுவர்க்காகும்

நீதிகதாகிருதிகள்.

இஃது

ஈஸாப் சொல்லிய கல்பனாகதைகளில் சிலவற்றைச்

சிறுமிகள் பாடத்தக்க தமிழ் பாட்டுகளாகச்

சித்திரப் படங்களுடன்

வ. கிருஷ்ணமாசாரியர்

இயற்றியது.

1886.

PRINTED AT THE S. P. C. K. PRESS, MADRAS.



DEDICATED

TO

THE CHILDREN OF MY COUNTRY

ON BEHALF OF

MY GRAND CHILD


FOR WHOSE AMUSEMENT AND INSTRUCTION

THESE SONGS

WERE FIRST COMPOSED.

CONTENTS.

அட்டவணை.



THE FOX AND THE CROW.

குள்ள நரியும் காக்கையும்.

இங்கிலீஷ்மெட்டு.　　　　　　　　　　　　　　　ஆதிதாளம்.

பல்லவி.

தந்தந் தந்தந் தனதனனு
தந்திர நரியின் மோசம்பார்.

கண்ணிகள்.

1. பருத்த தேங்காய்—துண்டுதனைப்—பலமாய்க் காகம்வாயில்கௌவி
பக்ஷத் துடனுன் னதமரத்தில்—பாங்காய் நின்ற தனைப்பார்த்து
பாசமதாய்—மோசஞ்செய—நேசம்போலப்—பேசினதாவது　　　தந்தந்.

2. கண்ணுக் கினியப் பெண்ணரசே—கரிப்பானையைப்போல் கறுப்பென்று
கண்ட மனிதர் உனைப்பேசக்—காதில் கேட்க வெறுப்படைந்தேன்
காசினியில்—தேசுமிக—வீசுபனிக்—கட்டிப்போலொளி　　　தந்தந்.

3. இறகைப் பார்த்தேன்; நீகரிபோல்—இருக்கிருயெனச் சொல்பவர்கள்
எல்லாம் பிறவிக் குருடரென—எவரும் நினைக்க வேண்டுந்தான்;
ஏசலிலா—ரூபமதை—நீயுடைத்தாய்—இருத்தலே நிஜம்　　　தந்தந்.

4. உன்னைக் கண்ட மாத்திரத்தில்—உன்மேல் மோகங் கொள்ளாரோ;
உனைப்போல் எந்தப் பக்ஷிகளும்—உறத்து நன்ருய்ப் பாடுமோதான்;
உவப்புடனே—இகழ்ச்சியிலாப்—புகழ்ச்சியாகப்—பாடுவாயென்　　　தந்தந்.

5. கபடம் இல்லாக் காகமது—கைப்பொருள் போவதை யறியாமல்
கள்ள நரியின் வார்த்தைதனைக்—கருத்தாய் நம்பிக் கா கா கா
காவென்றே—வாய்திறந்து—கூவத் தேங்காய்—தரையில் விழுந்திட　　　தந்தந்.

6. அந்த க்ஷணம் தேங் காயைநரி—அன்பாய்க் கௌவிட ஓடிற்று
ஆ ஆ இனிய மொழியைநம்பி—அனேகர் மோசம் போகின்ருர்
அதென்னமோ—ஆச்சரியம்—ஆச்சரியத்தினும் ஆச்சரியம் இது.　　　தந்தந்.



THE WOLF AND THE CRANE.

கோனாயும் நாரையும்.

இராகம் பிலஹரி. ஆதிதாளம்.

பல்லவி.

ஆசைகாட்டி மோசஞ்செய்யும்
அன்பில்லாத்தோண்டானைப் பாரும் பெண்ணே.

அநுபல்லவி.

காசினியில்பரி யாசம் செய்வார்போல் — ஆசைகாட்டி.

சரணங்கள்.

1. கொழுத்த ஆட்டின்—குட்டிதனைக்—கோனாய்த்துரிதமாய்த் தின்னிடவே
கோனெலும்பு—தொண்டைதனில்—குத்திக்கொள்வதனால்—நோகவே — ஆசைகாட்டி.

2. எவ்விதத்தில்—இவ்வெலும்பை—எடுத்திடுவேனென் றிரைச்சலிட்டு
எக்கமுற்றே—யிருக்கையிலே—எதிரில் ஒரு நா—ரையைக்கண்டு — ஆசைகாட்டி.

3. நீதயவாய்—உன்கழுத்தை நீட்டியென் தொண்டையில் சிக்கிருக்கும்
நீட்டெலும்பைப்—பிடுங்கிவிட்டால்—நிசமாய் வெகுமானந்—தருவேனென — ஆசைகாட்டி.

4. அந்தப்படி—நாரைபக்ஷி—அவ்வெலும்பைப்பிடுங் கியெறிந்தே
ஐயாவெகு—மானமெனக்—கன்பாய்த்தாருந்தோஞ்—டா னென்றுகேட்க — ஆசைகாட்டி.

5. அப்பாலேபோ—உன்தலையை—அப்போதே கடித்துப்போ டமல்விட்டேன்
அதுவேபெரு—மானமென்று ஆ! ஆ! ஆ! போபோ! வென்—றோடினதே — ஆசைகாட்டி.

6. காரியமா கிறவனாக்கும்—கனிந்தசொற்களையே நியோர்பேசி
காரியமான—தக்ஷணமே—கடுஞ்சொல்லைச் சொல்லியே—போவென்பரே. — ஆசைகாட்டி.



THE ASS IN THE LION'S SKIN.

சிங்கந்தோலை போர்த்த கழுதை.

இராகம் கமாஸ். ரூபகதாளம்.

பல்லவி.

சிங்கந்தோலைக்–கழுதைபோர்த்துச்–செருக்காய் காட்டிலே
திரிந்திருந்த–மோசந்தன்னைச்–சொல்லுவேன் கேட்பீரே

அநுபல்லவி.


பங்கமில்லாத சிகமுந் தோலும்
பாங்காய் தனக்குப்–பொருந்த பார்த்து சிங்கந்.

சரணங்கள்.

1. சங்கையின்றி–பூமியெங்குந்–தன்னுதாகவும்
தன்னைக்கண்ட–மிருகம்யாவும்–தானேயோடவும்;
பங்கமில்லாமலே–கொஞ்சநாளில்–சிங்கம்போலவானேம்
நம்மையாவர் ஐயிப்பரென்று–நம்பி வாய்விட்டுக் கூவ சிங்கந்.

2. காட்டிலோடிப்–போனமிரு–கங்கள் யாவுமே
கழுதைக்குரல்–என்றெண்ணியதைக்–கண்டறியவே
ஓட்டமாய் வந்ததின்–காதையுற்றுப்–பார்த்துக் கழுதையென்று
உள்ளமகிழ்ந்ததின்–மேலேயோங்கி–யொன்ருய் வீழ்ந்தன சிங்கந்.

3. அந்தத்தோலைப்–பிச்செறிந்து–அதன் திருட்டுக்கைக்கே
அஞ்சச்செய்த–கழுதையேயென்–றறைந்து கொன்றனவே
இந்தவிதமாய்–மாறுவேஷம்–போட்டுத் திரிபவர்கள்.
எவ்விடத்திலும்–வெளிப்பட அவ–மான மடைவார்களே. சிங்கந்



THE FOX AND THE GOAT.

நரியும் பள்ளையாடும்.

இராகம் செஞ்சுருட்டி. ரூபகதாளம்.

கண்ணிகள்.

1. பள்ளையாட்டை நரிசெயும் வஞ்-சனையைப் பாருங்கள்—அந்தப்
படியேமாந்து—போகாதிருக்கும்—படியே சேருங்கள் ஒரு பள்ளை.

2. துள்ளியோடும்போது கிணத்தில்நரியும்—தொப்பென்று வீழ்ந்து—கிடக்க
தூக்கிவிட்ட—ஆருமில்லாமல்—துக்கத்தில் ஆழ்ந்து ஒரு பள்ளை.

3. பசபசென்று முழிக்கும்போது—பள்ளையாடொன்றுவந்து—எட்டிப்
பார்த்திந்த ஜலம்—ருசியாவென்று—பரிவுடன் கேட்டு ஒரு பள்ளை.

4. நின்றதைக்கண டந்த நரியும்—நீ நல்ல புண்ணியம்—செய்தாய்
இன்றல்லோ உன்—ஜென்மமும்ஈ—டேறுவது கண்ணியம் ஒரு பள்ளை.

5. தேவாமிர்தத்தைப் பார்க்கிலும் மிது சிறப்புள்ள தீர்த்தம்—இந்த
தீர்த்தத்தைப் புசித்—தாலல்லோ மோக்ஷம்—செப[illegible]னேன் எதார்த்தம் ஒரு பள்ளை.


6. என்று நரி சொல்லப் பள்ளையாடு—இறங்கியே கிணற்றில்—தத்தளித்து
எப்படி யேறிப் போ—கலாமென நரி—இதோசொல்வேன் க்ஷணத்தில் ஒரு பள்ளை.

7. நின்றிரண்டு காலைமேலே—நீட்டுவாயிவ்விடத்தில்—உன்மேலே
சென்று நான் கரை—யேறியே யுன்னைச்—சேர்ப்பேன் அவ்விடத்தில் ஒரு பள்ளை.

8. நிஜமென்று பள்ளை யாடு காலை—நீட்டி நிற்கும்போது—அந்த நரி
நெஞ்சில் வஞ்சத்தோடும்—ஏறிமீது—நின்றுகொண்டப்போது ஒரு பள்ளை.

9. என்னைத்தொட்டு விட்ட சனி—உன்னைத் தொட்டது—புத்தியெனக்
இல்லைதாடிமாத்திரம்—முழுமுண்டென்று—சொல்லிப் போய்விட்டது ஒரு பள்ளை.

10. புத்தியில்லாதவர் இப்படியே கெட்டுப்—போவது மெய்யே—நல்ல
புண்யமுங் கீர்த்தியும்—புத்தியாலல்லோ—புகுந்துபாரையே. ஒரு பள்ளை.



THE DOG IN THE MANGER.

மாட்டுத்தொட்டியிலிருந்த நாய்.

இராகம், வசந்தம்
அல்லது ஸஹா[illegible].

ஆதிதாளம்
அல்லது அடதாளசாப்பு.

பல்லவி.

நாயின் பொறுமைபோல்—ஓ ஓ ஓ!
நாட்டாரே சொல்லுங்கள் நாசாதியிலுமுண்டோ?

அநுபல்லவி.

பாயும் பசுத்தொழுத்தின் பருத்த தொட்டியில் வைக்கோல்
பாங்காய்ப் போட்டிருக்கவே படுத்துக்கொண் டேயிருக்கும் நாயின்.

சரணங்கள்.

1. பசியுள்ள ஓரெருது பாங்காயருகில்வந்து
பக்ஷத்துடன் வைக்கோலைப் பக்ஷிக்கப் போகும்போது
நசியாத் துர்க்குணநாய்தான் நறுக்கென்றெழுந்து மெய்யும்
நடுங்கக் குரைத்ததனை நாடவொட்டாமற்செய்யும் நாயின்.

2. தன்ஜாதியில் யாரையுந் தரணியில் அவ்வைக்கோலைத்
தாக்ஷிண்ய மின்றித்தொடத் தான் விடுவதைப்பார்க்கில்
தன்னைப் பட்டினியாகத் தன்தேகத்தைப்போடுவதே
தருமங்களுள் மேலான தருமமென்று தான் சொல்லும் நாயின்.

3. அதற்கு ருஷப்ம்நாயை யந்தக்ஷணமேதிட்டி
அபகாரி யானாலும்நீ யதனைத் தின்னவேவேண்டும்
அதுவுமில்லை தின்போர்க்கா கிலுங்கொடுப்பதுமில்லை
ஐயோ சீச்சீ! யீதுனக் கழகோ! என்றுபோயிற்று. நாயின்.

THE FOX AND THE GRAPES.

குள்ளநரியும் திராக்ஷக்குலையும்.



இராகம், நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

பல்லவி.

லல்லா லல்லா–லல்லா லல்லா–லல்லல–லல்[illegible]ல லா
லால லல்ல–லால லல்ல–லல்லல–லல்லல லி[illegible]

சரணங்கள்.

1. இரைகிடைக்கா தவஸ்தைப்படும் இ[illegible]க்குநரி[illegible]
இங்கும் அங்கு மாய்த் திரிந்தே எண்ணமிடுகை[illegible] லல்லா–லல்லா.


2. குற்றமில்லாத் தோட்டமொன்றில் கொடிமுந்திரிப்பழக்
குலைகள்தொங்க அதனைப்பார்த்துக் கொண்டுபோகிட லல்லா–லல்லா.

3. குதித்துக்குதித்துக் குதித்துக்குதித்துக் காலசைந்து[illegible]மே
குலைகள்எட்ட இல்லையென்று குந்திக்கொண்டுமே லல்லா–லல்லா.

4. இனிமேல் எனக் ககப்பட்டாலும் இதனைத் தின்பனோ
எனக்கு வேண்டாம் புளிக்குஞ்சிச்சீ! என்று போயிற்று லல்லா–லல்லா.

5. இதனைப்போல மனிதரெல்லாம் எடுத்தகாரி[illegible]
எற்றபடியே முடிந்தால் எம்மால் ஆயிற்றென்பரே லல்லா–லல்லா.

6. இல்லாவிட்டால் இக்காரியம் எனக்குச் சம்மதம்
இல்லையென்று இகழ்ந்துபேசி இணங்கிவாழ்வரே. லல்லா–லல்லா.



THE LION AND THE BOAR.

சிங்கமும் முள்ளம்பன்றியும்.

இராகம், காபி. சாப்புத்தாளம்.

பல்லவி.

சண்டையால் வருவ தபாயம்—அதைச்
சாராதிருப்பதே உபாயம்.

அநுபல்லவி.

அண்டைஅச லார்பழிக்க
அறிந்[illegible]ருஞ்சிரிக்க சண்டையால்.

சரணங்கள்.

1. தாவுவனந்தனி[illegible]லே—எங்கும் [illegible]ஞ்சஞ்
ஜலங்கிட்ட[illegible]மயினுலே
மேவுமிருகங்க[illegible]ளெல்லாந் தவித்துத்தலை[illegible]ட
வீரசிங்கமு முள்ளம் பன்றியும்அவ்வன[illegible]நாட சண்டையால்.
2. குட்டைபொன்றங்கிருக்க—அதின்ஜலங்
குடிக்க இரண்[illegible]க
இஷ்டம்நான[illegible]குடிப்பேன் என்றது முள்ளம்பன்றி
இல்லைநானே முன்குடிப்பேன் என்றுசிங்கம் வீம்புபண்ணி சண்டையால்.
3. இரண்டுமேகோபங்கொண்டு—சண்டைசெய்து
இளைப்பாறு தலைக்கண்டு
பருந்து[illegible]கழுகு காகம் கூடிக்கொண் டதைப்பார்க்க
பருந்திந்த கோரயுத்தம் பண்ணுவதேன்? என்று கேழ்க்க சண்டையால்.
4. பயமில்லைஇரண்டிலொன்று—கீழேவிழுந்து
பதைத்துயிர்விடுமே இன்று
தயவாய் நாம் பக்ஷித்திட தத்ததுதெய் வாநுகூலம்
தங்கும் நம் மினத்தோர்க்[illegible]கல் லாம்ஈதே நல்லகாலம் சண்டையால்.
5. இப்படிகழுகுசொல்லவே—பன்றிமேல்பார்த்து
இனி சண்டை [illegible]ல்ல தல்லவே
அப்படி[illegible]காக்கைக்கும் ஆவியைக்கொடுப்பதிலும்
அடங்கிநாம் ஒருமித்தால் அதுவேயோக்யம் எதிலும். சண்டையால்.



THE FOX AND THE LEOPARD.

நரியும் சிறுத்தையும்.



இராகம், ஸ்ரீரஞ்சனி. — ஆதிதாளம்.

பல்லவி.

அரிதாங் கதையொன்றுரைசெய்வேன்—இதை
அன்பாய்க்கேளும் சகிமாரே! நான்.

அநுபல்லவி.

ஒருநாள் வனத்தில் நரிபோகையிலே
பெரிதாஞ் சிறுத்தை யெதிரா கையிலே — அரிதாங்.

சரணங்கள்.

1. இதுவும் அதுவும் எதிர்நின் றிடவே
பொது வாருமில்லை யிதைக்கே ளெனவே — அரிதாங்.

2. எனைப்பார் பலபுள் ளிகளால் சிறந்தே
இருப்பேனெனச் சிறுத்தை இதைநரி அறிந்தே — அரிதாங்.

3. மெய்தான் அறிவின்ன தென்றறி யாதால்
மேனியைப் பார்த்தழகென் றுய்த் தெரியாதால் — அரிதாங்.

4. உனைப்போல் சிலபேர் தனையே புகழ்வார்
ஊராரும் மற்றுமுள் ளாருமே இகழ்வார் — அரிதாங்.

5. நரியும் மதிசொல் லிடவே சிறுத்தை
நம்பேனென் றோடிக் கூடினது தன்னினத்தை — அரிதாங்.

6. அறிவே அழகென் றறிந்தோரறிவார்
குறியாய்! குறியா தவரே சிறியார். — அரிதாங்.



THE STAG AT THE WATER POOL.

குளத்தில் நீர்க்குடிக்கவந்த கலைமான்.

இராகம், உசேனி. ரூபகதாளம்.

பல்லவி.

படாடோபக் காரனை நம்பினால்-பிலவாம் தொல்லையே—மெத்த
பஞ்சையைப்போலிருப் போனை நம்பினால்-பயம் ஒன்றில்லையே.

அநுபல்லவி.

எடா எடுப்பு எடுத்தால் மோசம்
எவற்கும் இவன்மேல் வரும் ஆயாசம்— படா.

சரணங்கள்.

1. அதற்கு சாக்ஷி கலைமான் ஒரு நாள் அருந்தும் ஜலத்திலே-கொம்பின்
அழகையும் கிளைகளையும் கண்டு-ஆ! ஆ! இன்னிலத்திலே
இதற்குத் தகுந்த காலில்லாமற்போச்சே-இந்தஜென்மம் எடுத்திப்படி யாச்சே— படா.

2. காலைப் பழித்துக் கொண்டிருக்கையில் காட்டிலுள்ளநாய்கள்-ஒன்றாய்
கலந்து கும்பாய் வருவதைக் கண்டு-காலோட்டமாய்க் கால்கள்
ஞாலத்தில் தங்காமல் பேரோட்டம் எடுக்க-நடுவில் ஓர் புதரில்தான்போய் படுக்க—படா.

3. படுக்கவே நாய்கள் கூச்சலைக்கேட்டு பயந்துகொண்டெழுந்தது-சில
பருத்தக்கொடிகள் கொம்பில் சுற்றிக்கொள்ள-பாரின்மேல் விழுந்தது
வெடுக்கென்று நாய்கள் கவ்வ எதிர்வர-மேனி நடுங்கி உள்ளத்தில் பயந்தர— படா.

4. கொம்புகளை வெகு பெருமையாகக் கூட்டிஎண்ணினேம்-சிறு
தோல்போலிருக்கும் கால்களை இழிவாய்-குறித்து நண்ணினேம்
அம்புவியிற்கால்செய் தது சகாயம்-அழகுகொம்பே செய்த தபாயம். படா.



THE FOX WHO HAD LOST HIS TAIL.

வாலிழந்த குள்ளநரி.

இராகம், பிலஹரி—இங்கிலீஷ்மெட்டு. ஆதிதாளம்.

பல்லவி.

தங்கள் தங்கள் சுகத்தை யெண்ணிச் சகலருமேச்சிடவே
தானே தேதோ போத்ததருவார் தரணியில்வெகுபேர்கள்.

அநுபல்லவி.

அங்கதர்க்கோர் சிறுகதையுண்டு
அதை யிங்குரை செய்வோம்
அன்பாய்நாளுந் தென்பாயக்கேளும்
அழகிய சபையோரே. தங்கள்.

சரணங்கள்.

1. வேடனொருவன் இருப்புவலையை—வீசிவிட்டவன்போனான்
மெள்ளத்துள்ளிக் குள்ளநரியொன்று—வீழ்ந்ததில் மாட்டிக்கொண்டு
ஓடவெங்கும் வழிபார்த்து—[illegible]பை—ஒடுக்கியோர் வழிசெல்ல
உள்ளவாலும் அற்றுவிழவே—உள்ளங்கலங்கி நின்று. தங்கள்.

2. நாணமடைந்து தன்கூட்டத்தை—நாடியோர்புறம் நின்று
நல்லவுணவு கொள்ளவென்றால்—நம்மைத் தடை செய்யுதே
ஆனதனால் வாலெழுத்தும்—அறுத்திட வேண்டுமென,
அங்கோர்கிழநரி கேட்டதென்ன—அதிசயமென் றெண்ணி. தங்கள்.

3. மூடகனாயுன் கதை போர்ச் செய்ய—முழுமனதுடனினைந்தாய்
மூடனுனைப்போல் வேறுமுண்டோ—முற்றிலும் வாலிழந்தாய்
ஊக்கத்துடன் வால் இழந்தவர்மேலோ—உள்ளவர்மேலோ சொல்
உனதவமானந் தனைப் பார்த்தூரார்—பழித்திட வேதாழ்ந்தாய். தங்கள்.



THE LION, THE BULL AND THE GOAT.

மாடும் பள்ளையாடும் சிங்கமும்.

இராகம், சுருட்டி. சாப்புதாளம்.

பல்லவி.

சின்ன கதை கேளும்-சின்ன கதை கேளும்!

அநுபல்லவி.

தன்னைப்பற்றி தர்மம்மென்று
முன்னோர் சொன்னார் மர்மம்ஒன்று. சின்ன.

சரணங்கள்.

1. சிங்கங் காட்டினிலே-சிங்கங் காட்டினிலே
திடத்த ஓர் மாட்டைக்கண்டு மடக்கி துரத்திக்கொண்டு;
எங்கும் போகவொட்டாமல்-கெர்ஜனைபட்டுவர
ஏக்கங் கொண்டிரிஷபம்-என் செய்வே னென்றுகதற சின்ன.

2. ஆட்டுப் பட்டியிலே-ஆட்டுப் பட்டியிலே
ஆடு நிற்கக்கண்டதனை நாடிப்போய் நின்றே எதனை
காட்டிக் கொத்திடாமல்-காப்பாற்றுவதே வீரம்
கண்டும் காணாதுபோலே-கைவிட்டால் என்னசாரம். சின்ன.

3. பள்ளை யாடு சொல்லும்-பள்ளை யாடு சொல்லும்
பட்டபாட்டிற் சாரம்போமே நட்டதெல்லாம் சாவியாமே;
மெள்ளஎன் குடும்பத்தோடுங்-கொல்லப்பார்க்கிறாய் எந்தனை
மேலும் பலவானுனைப்போல்-நான்அல்லவே நீயும்நினை. சின்ன.



THE TREE AND THE REEDS.

காட்டுவாகைமரமும் நாணலும்.

இராகம், நாதநாமக்கிரியை
அல்லது இந்துஸ்தானிமெட்டு.

ரூபகதாளம்.

கண்ணிகள்.

தனம்தனம்–தனம்தனம்–தோம்தனதன–தன
தனம்தனம்–தனம்தனம்–தந்தம்தனதன.

1. ஆற்றங்கரை–யோரத்திலே–அனந்தங்கோரையுண்டு–அதற்கு
அடுத்தாப்போல்–காட்டுவாகை–ஆ காயமளாவிக்கொண்டு

2. இந்தப்படி–வெகுநாளாய்–இருக்கும்வேளையிலே–ஒரு
இடியுங்குமுறல்–மழையுங்காற்றும் உண்டாச்சுதந் நாளையிலே

3. அங்கிருக்கும்–காட்டுவாகைவேர்–ஆற்றுக்கோரையின்மேல்–முறிந்து
அடிசாய்ந்து–முடிவீழ்ந்த லங்கோலமா யினிமேல்

4. [illegible]யெடுக்கப்–போகிறதில்லையென்–றெண்ணி அந்தமரம்–நன்றாய்ப்
[illegible]ழைத்திருக்குங்–கோரையைப்பார்த்துத்–தான் சொல்லும்விவரம்

5. காற்றுக்குமழைக்–குந் தப்பின–காரணமேதோ–கோரையே
கபடவஞ்சனை–இல்லாமலென்னுடன்–கூறலாகாதோ

6. புல்லைப்பார்த்துப்பொ–றுமைகொள்வது–போதும்போதுங்கேளும்–நீங்கள்
போர்கொடுப்பதே–காற்றுக்கும் உடன்றும்–பொருத்தம் என்றாளும்

7. மந்தமாருதம்–வந்துவிழுந்தாலும்–வணங்கியே கொடுப்போம்–நாங்கள்
வாராதவெள்ளம்–தான்வந்தாலும்–[illegible]தைவிட்டிருப்போம்

8. இறு மாப்பு–கொண்டபேர்கள்–இப்படித்தானே கெட்டார்–தமக்கு
எண்ணிலாத–சுகத்தையெல்லாம்–இழந்துபோய்விட்டார்

9. சத்துருக்களை–வெல்லவேண்டுமானால் தாழ்ந்தே போகவேணும்–ஒருவர்
ஜகந்தனிலே–மமதைகொண்டால் தாங்கெடுவார்காணும்.



THE CROW AND THE PITCHER.

காகமும் நீர்ஜாடியும்.

இராகம், கமாஸ். ரூபகதாளம்.

பல்லவி.

வருத்தம்வந்தால் உபா யதந்திரம் வந்திடுமே எவர்க்கும்–அதை
வாய்விட்டு நான்சொல்ல வேணுமோ தெரியும்–வழக்கம் யாவர்க்கும்.

அநுபல்லவி.

பருத்த வயிற்றின் பசியின்கொடுமை
பார்க்கக்கூடாமல் அப்போது செய்யருமை வரு.

சரணங்கள்.

1. அறிவிற் குறைந்த காகத்துக்குத் தாகம்–அதிக மாகவே
அவ்விடத்திலோர் ஜாடியினிற் ஜலம்–அங் கிருக்கவே
பறந்துபோ யந்த ஜாடிமேல் நின்று
பார்த்தபோது ஜலம் எட்டவில்லை யென்று; வரு.

2. எண்ணியே யேங்கி இந்தஜலம் நமக்–கெப்படி கிடைப்பது?
இதற்குத் தந்திரஞ் செய்யாவிட்டால் தாகம்–எவ்விதம் தணிப்பது?
வண்ணமான கூழாங் கற்களைப் பார்த்து
வாயினாற் கவ்விக் கொண்டு வந்துசேர்த்து; வரு.

3. ஒவ்வொன்றாக அந்த ஜாடியிற்போட்டு–உற்றுப்பார்க்கவே
ஒருநாழிகைக்குள் காய்ந்திருந்த ஜலம்–உயர்ந்துவருகவே
செவ்வையாக ஜலங் குடித்தோடிப் போச்சு
தீர்க்க தந்திர வுபாயத்தினு லாச்சு. வரு.



THE LION AND THE MOUSE.

சிங்கமும் சிற்றெலியும்.

இராகம், ஸகஞ, அல்லது ப்யாக். அடதாளசாப்பு.

பல்லவி.

சிங்கத்துக்கும் சிற்றே-லிக்கும் நடந்ததை-ஜகத்தினில் அறியாரோ?

அநுபல்லவி.

எங்கு மனிதர் நாடா-திருக்குங் காட்டிலோர் சிங்கம்
அங்கு படுத்துத் தூங்கும்-அப்போ தவ்விடந் தங்கும் சிங்கம்.

சரணங்கள்.

1. சிற்றெலி ஒன்றதன் மீது-தத்திக்குதித்துத்-திடுக்கிட் டெதிரில் நின்றபோது
மெத்த கோபங்கொண்டு-விரவாய்த் தின் கை நீட்ட
விலவிலத் தச்சிற்றெலி-மெலிந்து தன் முகங்காட்ட சிங்கம்.
2. ஊனில்லாத சிறிய ஜந்து-எந்தனைக் கொன்றால்-ஒருவாய்க்கும் ஆகாதுவந்து
ஆனையைக் கொன் றாலல்வோ-அப்போதாறும் உந்தன் பசி
அடங்கும் வாய்க்கு மெதுவாம்-அது அல்லோ நல்ல ருசி சிங்கம்.
3. எந்தனை நீ காக்கவேணும்-அதுஉன்புண்யம்-எப்போதாயினும் உதவு வேன்காணும்
அந்த எலியின் சொல்லை-ஆக்கிரகித்த சிங்கங் கேட்டு
அடக்கிக் கொண்டது கோபம்-அப்போதந்த காட்டு சிங்கம்.
4. ஒருநாள் அந்த வனத்தில் வலையை-வேடன் போட்டு-ஒளித்துக் காட்டாதிருந்தான் தலையை
இரைக்காய்ச் சென்ற அச்சிங்கம்-வலையில் மாட்டிக் கொண்டு
இடிமுழக் கத்தைப்போலி-ரைச்சலிடு வதைக்கண்டு சிங்கம்.
5. சிங்கத்துக் கேதோ அபாயம்-வந்த தென்றெலி-தெரிந்து வந்து பார்த்தே உபாயம்
பங்கப் படவலையைப்-பல்லால் கடிக்கப் பார்த் தப்
பயந்தெளிய எலியைப்-பரிவாகமுன் காத்த சிங்கம்.
6. உலகில் ஏழைகளையோர் துரும்பாய்-எண்ணியவர்மேல்-உள்ளமிரங்கா திருப்பார் இரும்பாய்
பலபல யோசனை-செய்வதேன் இதற்குச் சாக்ஷி
பருத்த சிங்கம் எலியும்-போதாதோ அத்தாக்ஷி. சிங்கம்.



THE HARE AND THE TORTOISE.

முயலும் ஆமையும்.

இராகம், எமுனுகல்யாணி. திருபுடை—தாளம்.

பல்லவி.

ஆமையுடன் ஒரு—முயல்தான் போட்ட பந்—தயத்தின் அதிசயம் பாருங்கள்.

அநுபல்லவி.

க்ஷேமமாவென்று—முயலுங்கேட்டுப் பின்
சிரித்துப்பரியாசஞ்—செய்யநினைந்தொரு — ஆமை.

சரணங்கள்.

1. இந்தயிடம் விட்டோர்—நாழி தூரமட்டும்—இருவருஞ் சனே யாம லோடவே
பந்தயஞ் சொல்லிப்—போட்டு முயல் நிற்க—பார்த்து ஆமையும் நாடவே — ஆமை.

2. ஆமையை விட்டு—முயலுமுன்னே யோடி—அங்கோர் புதரினில் நுழைந்துபின்
தாமசமாய்ப்போக—லாமென் றெண்ணித் தலை—சாய்த்து நெடுநேரம் தூங்கிப்போக;ஓஓ! ஆமை.

3. ஆமையானது—மெதுவாய் நகர்ந்துப் போய்—அந்த யிடத்தினில் சேரவே
ஜாமமட்டுந் தூங்கி—முயல் விழித்துக்கொண்டு—தட்டுகெட்டுத்தட மாறி நேரவே — ஆமை.

4. ஆர்கெலித்தது?—சொல்லென் றுமை கேழ்க்க—அசந்துமுயலது நின்றதே
கூர்மை புத்தியில்—லாதவுந்தன் கர்வம்—குன்றிப்போவ திப் படிதான் என்றதே. — ஆமை.



THE WOLF AND THE LAMB.

தோண்டானும் ஆட்டுக்குட்டியும்.

இராகம், செஞ்சுருட்டி. ரூபகதாளம்.

பல்லவி.

தோண்டான் ஆட்டுக்குட்டி யை வதைசெய்ததைச்—சொல்லுவேன் கேளுங்கள்!

அநுபல்லவி.

நீண்டமாமலை—தன்னைச் சூழும்
நெடுஞ்சுனைகளில்—நின்று வாழும்— தோ.

சரணங்கள்.

1. மலையில் நின்று வருந்தண்ணீரை—வந்து ஆட்டுக்குட்டி அருந்துஞ்சீரை
தொலைவில் நின்று பார்த்தவ் வாட்டைத்—துணித்திட எண்ணி வருஞ்சீ ராட்டை— தோ.

2. ஏனிங்கு வந்து தண்ணீரைக் கலக்கி—எனக்குதவாமல் மலைந்த விலக்கிப்
போனதனால் நீஅதற்குத்தராவதி—பொருந்து மென்குலத்துக் கபராதி— தோ.

3. இப்படி தோண்டான் கேட்டதை எண்ணி—ஏழை யாட்டுக்குட்டி யோசனைபண்ணி
அப்படி யில்லையே நியருந்திப் போட்ட—அந்த சலம் புசித்தேனென்றதைக் கேட்ட— தோ.

4. இல்லை உங்களப்பன் ஆறுமாதமுன்—எங்களை வதைசெய் திட்ட சேதியுன்
நல்லகாதில கேட்டதில்லையா ஒன்றும்? நானுனைக் கொல்ல நியாயம் இல்லையாவென்று— தோ.

5. அப்போது நான் பிறந் திருக்கமாட்டேனே—ஐயையோ அந்யாயம் நீ சொல்லக்கேட்டேனே!
தப்படி யெடுத் தாயென்று ஆடுசொல்ல—தாக்ஷண்யம் பாராமல் அப்பொழுதே கொல்ல— தோ.

6. உங்கள் மூப்பாட்டமார் செய் திருப்பதை—ஓ ஓ ஓ! எண்ணி நான் செய்வேன் சித்ரவதை
தங்கு தடையில்லாமற் கொன்று பின்னும்—தன் தொந்தி நிறையக்கடித்துத் தின்னும்— தோ.

7. துன்மார்க்கர்கள் தங்கள் செய்கையும் எண்ணுமல்—தொழுது கேட்போர்மேல் தயவுபண்ணுமல்
சன்மார்க்கர் கூட்டத்தா ருடன்சேராரே—தம்மைப்பிறர் பழிப் பதையும்பாராரே— தோ.

THE DOG AND THE COOK.

நாயும் சமையல்காரனும்.

இராகம், பிலஹரி. ஆதிதாளம்.

பல்லவி.

அழையா வீட்டில் நழையுஞ் சம்மந்திகீ
கவமா னமதே வெகுமா னமதாம்.

அநுபல்லவி.

பிழைசொல் லறியேன்; ஒருநாள் தனவான்.
பெரிதாம் விருந்தொன் றளித்தான் கனவான். அழையா.


சரணங்கள்.

1. தனவான் வீட்டு நாய்தான் தெரிந்தே
தன்னின மானதோர் நாய்க்குப் புரிந்தே
இனிமையாம் நல்ல பதார்த்தங்கள் உண்டு
இருவரும் புசிக்கலாம் வா! இஷ்டங் கொண்டு அழையா.

2. விருந்தா ளியின்வீட்டு நாயிது சொல்ல
மிகச் சந்தோஷமாய் வாலாட்டி மெல்ல
அருந்துவோ மென்றுபண்டங் களைமோந்து பார்க்க
அப்போது சமையல் காரன்இதை நோக்க; அழையா.

3. நாயின்பின் கால்களைப் பற்றிவீதி யிலெறிய
நடுஇடுப் பொடிந்து பின் கால்களு முறிய
மேயும் மற்றநாய்கள் கண்டு மனம் பதற
வீறிட்டு விருந்துக்கு வந்த நாய் கதற; அழையா.

4. விருந்து[illegible]யாவென்று தெருநாய்கள் கேட்ட
விதந்தெரிந் தேமது [illegible]த்தக்குடித்துப் போட்ட
தரந் தெரியாமலே யதிகமா யுண்டேன்
[illegible]வெளிப்பட்ட தறியேன் உன்னைக் கண்டேன். அழையா.



THE LION AND THE THREE BULLS.

சிங்கமும் மூன்று எருதுகளும்.

இராகம், பார்ஸ். ரூபகதாளம்.

பல்லவி.

கட்டுக்குலைந்தால் கெட்டுப்போமென்பதைக்
கதையாற்சொல்லுவேன் கேளுங்கள்.

அநுபல்லவி.

மட்டுப்படாத புல்லுள்ளத்தாக்கில் மாடுகள்மூன்றுமேகூடியே—தங்கள்
மட்டுமேவெகு—திட்டமாய்மன—திஷ்டமோடுசெய்—கட்டுப் பாடு கட்டு.

சரணங்கள்.

1. மூன்றுமாடு மிவ்விடத்தில் முற்றும்பிரியாமல் மேயலாம்—ஒரு
மோசம்செய்யாமல்—வாசஞ்செய்திடும்—தேசம்போக்கினால்—நாசமாகுமே! கட்டு.

2. ஒன்றைவிட்டொன்று பிரிந்திடாமல் ஒருமையாய் வாழ்ந்துண் டிருக்கையில்—அந்த
ஒத்துமையைக்—கெடுத்துப்பின்னால்—அடித்துத்தின்ன—நினைத்தோர் சிங்கம் பின்னும் கட்டு.

3. புறட்டுப்பேச்சால் பிரித்துவிடவே புல்லின்பசுமையை மாடுகள்—கண்டு
புத்தியீனத்தால்—எத்திசையுந்த—னித்து ஓடிற்று மெத்தப் புசித்திட கட்டு.

4. சமயமீதென்று சிங்கம்பார்த்தேத்த னித்தனி மூன்றையுங் கொன்றது—ஆதலால்
சற்றுநேரம் உன்—புத்தியால்நீ—நினைத்துப்பார்சிங்கம்—சித்து வித்தையெல்லாம் கட்டு.

5. தனிமரமும்தோப் பாகாதென்று தந்தைமார்சொல்லிய நீதியை—நீ
தஞ்சமாய்க்கொண்டு—நெஞ்சினில் என்றும்—வஞ்சிக்கும் குண[illegible]இல்லாதிரு. கட்டு.



THE MONKEYS AND THE CAMEL.

ஒட்டகமும் குரங்கும்.

இராகம், பிலஹரி. ஆதிதாளம்.

பல்லவி.

நம்தம் சக்திக்-கதிகஞ் செய்தால்
சகலரும் இகழ்வார் தரணியிலே.

அநுபல்லவி.

நான் அடங்கத்தன்-குலம் விளங்கிடுமே— தம்.

சரணங்கள்.


1. கானகத்தில்-மான் முதலாய்
கனத்த மிருக மெல்-லாங்கூடி
கட்டுப் பாடாய்-திட்டத்தோடும்
கலந்தனே-வரும் விருந்-துண்டு ஒன்ருய்ச்-சேர்ந்திருக்க. தம்.

2. வானரம் ஒன்-றெழுந்திருந்து
வந்திருக்குஞ் சபை-யார்முன்னே
வாலையாட்டிப் பல்லைக்காட்டி
வகைவகை-யாய் நின்று-கூத்தாடிய-பின்னே தம்.

3. பார்த்திருந்த-மிருகங்களெல்லாம்
பளாபளாவென்று கைகொட்ட
பருத்த ஒட்டகங்-கருத்தில்வெறுப்பாய்
பார்இந்தக்-கூத்தைவிட நான்—ஆடுவேன்—திட்டமாயென்று தம்.

4. ஒட்டகம் செருக்கா-யெழுந் திருந்து
உண்டிகள் உண்ணவர்-தன்னைப்பார்க்க
ஓடுவதும்-கூத்தாடுவதும்
உதட்டையும்-கழுத்தையும்-காலையும் நீட்டியே-காட்ட தம்.

5. இரண்டு கூத்தும்-பார்த்த மிருகங்கள்
இழிவாக ஒட்டகந்-தனைப்பார்த்து
இப்படிகாளு-நடிப்பது சீச்சீ!
என்றுபாவு-லே நகைத்து-ஒன்றுகூடித் துறத்திடத். தம்.



THE DOG AND THE SHADOW.

நாயும் நிழலும்.

இராகம், இந்துஸ்தான் காபி. ரூபகதாளம்.

பல்லவி.

நாயின்பே-ராசைதன்னை-நன்ருய்ச் சொல்லுவேன்—கேளும்.

அநுபல்லவி.

பாயும் ஆட்டின்-மாமி சம் வாயாற் கவ்வியே
பாங்காகவே தின்னத்-தான் கொண்டுபோகும், நாயின்.

சரணங்கள்.

1. போகும்வழியில்-ஓர் ஓடையிதேது
புதியதென்று தான்-எட்டிப்பார்த்தபோது-தன்
தேகம் ஜலத்தில்காணக்-கோபங்கொண்டந்த
செந்நாயைக் கவ்வ வாய்-திறந்தேமாந்த நாயின்.

2. நியாயமாய்ப் போனல்-நற்சுகங் கிடைக்குமே
நடுக்கொள்ளை யிட்டால்-நாசந்தான் நேருமே
ஆ! ஆ! ஆ! யிந்த நாய்-தனக்கு நல்விதி
அயன் போட்டிருக்க-ஏனே இந்தகதி! நாயின்.

3. இப்படியே வெகு-பேர் பேராசையால்
இழந்தாரே தங்கள்-கைப்பொருள் ஆகையால்,
அப்படி பேராசை-கொள்ளாது அழகு
ஆனதனல் நீ நல்-லோருடன் பழகு. நாயின்.

THE HAWK, THE KITE AND THE PIGEONS.

மாடப்புறாக்களும் பருந்தும் டேகையும்.



இராகம், கமாஸ். ரூபகதாளம்.

பல்லவி.

மாடப் புறாவின் கதை—கேளும்
மனதிரங்கி யிதை.

அநுபல்லவி.

தேடுந் தன்னினம்—எல்லாம் ஒன்றாய்க் கூடும்
தித்தித்தா வென்றே சிறகை விரித்தாடும்— மா.

சரணங்கள்.

1. வலுத்த ஓர் பருந்து—கூண்டின்மேலே—வட்டமிட்டே திரிந்து
அலுத்தசந்தே யிருப்பதைப் பார்க்கும்—அடித்துக்கொண்டுபோய் தன்பசியைத் தீர்க்கும்— மா.

2. இப்படியே தினமும்—பறிகொடுத்—தேமாந்தே மனமும்
செப்பிடம் வேறொன்றில்லாமலே திகைக்கும்—தெய்வமே தெய்வமே யென்றுளம்பதைக்கும்—மா.

3. திகைத் தங்கே நின்றது—அப்போது—டேகை யொன்று வந்தது
இகத்தி லெங்களைக் காப்பதுன் புண்யம்—ஏழைக் கிரங்குவ தல்லோ கண்யம்— மா.

4. வலிய வந்ததை—தள்ள மனம்—வருமோ யென்ன கதை
மெலிய வேண்டாம் நானேயுங்கள் வசம்—வீந்திருந்தே கூண்டில் காத்திருப்பே னிசம்— மா.

5. டேகை சொல்லிப்போட்டு—புறாக்களைச்—செரிக்கவே தின்றுவிட்டுப்
போகாமல் காவல்போ லிருப்பதை நாடும்—பொரித்த குஞ்சுகள் எங்கேயென்று தேடும்— மா.

6. ஒன்றைக் கொல்லும் பருந்து—டேகை தனக்—கொருமிக்க விருந்து
இன்றே நா[illegible]ாய் விட்டோம் இதற்கென் செய்வது—இப்படியே சிலர் ஏமாந்து போவது.— மா.



THE KID AND THE WOLF.

ஆட்டுக்குட்டியும் கோனாயும்.

இராகம், இந்துஸ்தானி காபி. ஏகதாளம்.

தங்கக்கண்ணிகள்.

தனனதனனதன—தானதனனதன
தனாதனாதனன—தனனா—தந்ததன தானாதனா.

1. பலமில்லாப் பேதையரும்—பலமான இடம் சேர்ந்தால்
பதட்டமாய்ப் பேசுவாரே—கர்வத்தால்—பலவிதம் ஏசுவாரே.

2. ஆட்டுக்குட்டி யொன்று கூரை—வீட்டின் மீதில் ஏறிக்கொண்டு
பாட்டை செல்லுங் கோனாய்தனைப்—பார்த்து—பயமில்லை ஏச உன்னை.

3. ஈவும் இரக்கமில்லை—எந்தசெந்துவைக் கண்டாலும்
தாவிப்போய்க் கவ்வியதை—நொடிக்குள் நீ—தான் செய்வாய் சித்திரவதை.


4. பதைப்போ உனக்கதிகம்—பாட்டன் முப்பாட்டன் மார்க்கும்
வதைப்ப துங்கள் குலத்தொழிலே—நாங்கள்—வாழ்வதுவும் தெய்வச்செயலே.

5. என்று திட்டி ஆடுசொல்ல—இத்தனையும் கேட்டுக் கோனாய்
நன்றென்று தலையசைத்து—உள்ளே—நாக்கும் ஊர லும்பதைத்து.

6. அங்கிருந்து பேச உனக்—கதிகாரம் மெத்த உண்டு
இங்கே வந்தால் நல்லபுத்தி—பண்ணிவிப்பேன்—என்றைக்கும் மறவாமலே.

7. எனச்சொல்லிப் போய்விட்டது—இப்படியே வெகுபேர்கள்
மனத்தில் மமதை கொண்டார்—கொண்டதல்லால்—மானிலத்தில் என்ன கண்டார்

8. அடக்கம்அம ரருட் சேர்க்கும்,—அடங்காதார் நரகத்தில்
ஆழ்ந்து கிடப்பார்களே—என்று முன்னோர்—அடிக்கடி சொன்னார்களே.



THE LION, THE BEAR AND THE FOX.

சிங்கமும் கரடியும் நரியும்.

இராகம், இந்துஸ்தானி காபி. ரூபகதாளம்.

பல்லவி.

பொருட்சேதமாவதெல்லாம்-போராட்டத் தாலல்லோ—கைப்

அநுபல்லவி.

தெரியாக் கோபத் தாலேகரடியும்
சிங்கமும் வாதாடினது போல் முடியும்,— கைப்.

சரணங்கள்.

1. காட்டில் சிங்கமுங் கரடியுஞ் சேர்ந்து
கடித்துப் போட்டதோ ராட்டை
கண்கள் சிவந்தே உனக்கெனக் கென்று
தறுவிக்கொண் டிரண்டுஞ் செய்தன சேஷ்டை.— கைப்.

2. இரண்டுஞ் சண்டை செய் தேஇளைப்பாற
எட்டிப் பார்த்தோர்நரி சேர்ந்து
இது சமயமென்றே அந்த ஆட்டை
யிழுத்துப்போக இரண்டும் ஏமாந்தது.— கைப்.

3. இடித்தவள் புடைத் தவளுமிருக்க
எட்டிப்பார்த்தவள் கொட்டிக்கொண்டு போனாப்போல்
மடிப்பு மோசஞ் செய்தே யுலகத்தினில்
வாழ்ந்திருப்போர் சிலர் தாம் தந்திரத்தினில்.— கைப்.



THE KID AND THE WOLF.

ஆட்டுக்குட்டியும் கோனும்.

அபூருபராகம். ஆதிதாளம்.

பல்லவி.

ஆட்டின் சமத்தைப் பாருங்கள்! ஓ! சகிமாரே!
ஆட்டின் சமத்தைப் பாருங்கள்.—பள்ளை க்குட்டி

அநுபல்லவி.

காட்டில் பட்டியை விட்டுப் போட்டு நெடுந் தூரம் மேயும்— ஆட்டின்

சரணங்கள்.

1. பள்ளையாடு மேய்ந்திருக்கப் பார்த்துக் கோனாய்த் துரத்திட
பத்துத் திசையிலும் ஓடிப் பசபசென்று முழித்திட
மெள்ளவே திரும்பிப்பார்த்து விதிதனை வெல்லக்கூடாது
மித்திர பேதஞ்செய்துதான் தப்பித்துக்கொள்ளுவேனென்னும்— ஆட்டின்.

2. என்னை நீயும் புசித்திட எனக்குச் சம்மதி,—ஆனல்
என்னாசை யொன்றுள்ளது, இதைக்கேட்டுத் தயைசெய்வாய்;
பன்னும் புல்வாங்குழலால் நீ பாடினல் அதற்கேற்கவே
பதமாய்க் கூத்தா டிமகிழ்வேன் பக்ஷிப்பாய் உன்னிஷ்டமென்னும்— ஆட்டின்.

3. ஆடிந்தப் படி சொல்ல ஆனலிதோ பார்—என்று
அங்குள்ள புல்லாங்குழலை ஆசையோ டெடுத்துநின்று
எத்திக்குங் கேட்க ஊத இதைக்கேட்டுப் பட்டினாய்கள்
ஏகமாய்வந்து கோனயை இழுத்துக் கடித்துக் கொல்லும்போது— ஆட்டின்.

4. தேவன்செய்த தண்டனையே சரி என்று கோனாய்—சொல்லும்
ஜெகத்தில் கசாயித் தொழில் செய்யும் செய்கையை நான்விட்டு
தேவ கானங்கள் முற்றும் தெரிந்தவன்போல் ஆட்டினது
சித்தங் களிக்கச் செய்யப்போய்த் தேடிக்கொண்டே னிந்தகதி.— ஆட்டின்.



THE COCK AND THE EAGLE.

சேவலும் கழுகும்.

இராகம், சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

நானென்றும் எனதென்றும் செருக்கடைவோர்கள்
நற்கதி யடையாரே இப்புவியோர்ரே.

அநுபல்லவி.

ஏனென்று கேட்டீராகில் இந்தச் செல்வத்தை நம்பி
எண்ணிறந்தோர் மாண்டாரே யிதை நல்லோர் வேண்டாரே— நா.

சரணங்கள்.

1. ஒருநாள் சாவலிரண்டும் நெற்களந் தனிற் சென்று
உனதெனதென்னவைகள் ஓயா வாதிட்டு நின்று
இரத்தக் களரியாக இரண்டுஞ் சண்டைபோட்டு
இளைத்ததில் ஒன் றோடவே யிருந்தது கூச்சலிட்டு— நா.

2. குட்டிச் சுவற்றி லேறிக் கொக்கரித்தே கெலித்த
கொண்டாட்டந் தனை யெண்ணிக் கொண்டு சபதம் பலித்த
இஷ்டத்தாலே சிறகுகள் இரண்டும் பறக்கடித்தே
இருக்க ஓர் கூளிகைகால்ல் இறுக்கிக் கொண்டோடித்தே— நா.

3. தோற்றுப்போன சாவல் சுகமாய்ப் பெட்டையைச் சேர்ந்து
தொல்லை யொன்று மில்லாமல் சுகித்தது வாழ்ந்தது
ஏற் றப்படி அடக்கம் இருந்தால் குறைவாராதே
இல்லாவிட்டால் இடர்கள் எந்நாளும் தீராதே. நா.



THE HORSE AND THE ASS.

குதிரையும் கழுதையும்.

இங்கிலிஷ்மெட்டு. ஏகதாளம்.

கண்ணிகள்.

ஆங்காரங் கொண்டால் முன்னே
அழிவே உண்டாகும்—பின்னே

1. தாங்காச் செல்வம் வந்ததென்றும்—தாம்
தனபதி யாகஇ ருப்போமென்றும்
தானே தன்னுள்ளே நினைந்து
தலைதெரியாமல் துள்ளிவிடும்— ஆங்.

2. போர்க்குச் செல்லுங் குதிரையொன்று—வண்ணான்
பொதி சுமந் தோடுங்கழு தையைக்கண்டு
போபோ! வழிவிட்டு அப்புறமே
புத்தியில்லையா வென்று கறுவிக்கொண்டு— ஆங்.

3. ஓடுங் குதிரைக்குச் சண்டையிலே—அங்கே
ஒருகுண்டு பட ஓர் கண்போகவே
உதவாது என்று குப்பை வண்டியிற்கட்ட
உழைத்தே யிழுத்துமனம் நோகவே— ஆங்.

4. செருக்கிழந்த குதிரை யைப்பார்த்து—உன்
சிங்காரப் பேச்செல்லாம் எங்கே போச்சு!
தேசத்திலே உன்னைப்போல் அகங்கொண்டு—
சீரழிந்தோர்கதை இன்றே! மெய்யாச்சு— ஆங்.

SERIES.

... obtained from the School Book and Vernacular Literature Society's and ...adras, the Addison Press, the Manager, *Times* Office, Mr. Kalyanarama Iyer, ...following rates :—

	Rs. As.
...	0 5
to the	0 1
... ...	0 5
Pictures ...ards for ...nt Classes	1 8
Press)	

	Rs. As.
The Story of Pachai Ammal, the Sick-Nurse, in Tamil	0 6
" " " in Telugu (In the Press)	
Select Fables of Æsop in Tamil Verse with Illustrations	0 10
The Queen-Empress Victoria and Her Empire in the Jubilee Year with a Map (*Nearly ready*)	
A Trip through the Old World with richly colored Map-Pictures, in rhyme and prose (In the Press)	

A liberal discount allowed to wholesale purchasers.

வ. கிருஷ்ணமாசாரியர் பிரசுரஞ்செய்த

சித்திரப் படங்களுள்ள கிரகபுத்தக மாலிகை.

...னவை.

	ரு. அ.
...ழுத்துப் புத்தகம்	0 5
...டு	0 1
...த்துப் புத்தகம்	0 5
...ன]...	0 10
...புத பச்சையம்மாள்	0 6

அச்சிட்டுவருபவை.

நானாதேச வழிநடைவிநோதம் [சித்திரந்தீர்ந்த படங்களுடனும் பாட்டுகளுடனும்.]
மகாராணியாரவர்களது 50வருத்து அரசாட்சி மங்களவாழ்த்து [படத்துடன்.]
தெலுங்கில் பச்சையம்மாள் சதை.
மலையாள சித்திரவெழுத்துப் புத்தகம். [வர்ணந்தீர்ந்தது.]
தமிழ் சித்திரவெழுத்துப் படம். "

...ய காலீஞ் புத்தகச்சாலையிலும், குஜிலிக்கடைக்கடுத்த கிறஸ்தியன் வர்னாக்குயலர் புத்தகச்சாலையிலும், மலைச்சாலையில் ...ஊ பத்திரிகை அச்சுக்கூடத்திலும், பீங்கான்கடையில் கல்யாணராமய்யர் புத்தகக்கடை, இவைமுதலான விடங்களி...க்கு அகப்படும். ஒவ்வொரு பிரதியாய் வாங்காமல் பாடசாலைகளுக்கும் புத்தக வியாபாரத்திற்கும் மொத்தத்தில் ...க் கொடுக்கப்படும்.

